பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
06 02 2025 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அனைத்து தரப்பினரின் நலன்களுக்காக மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களும் வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் புதுதில்லியில் நேற்று கிரீஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **George Gerapetritis**-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக பேச்சுகள் நடத்தினார்.

4. மேற்குவங்க மாநில முதலீட்டாளர்கள் மாநாட்டில் ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

5. ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் சீனாவின் அர்பின் நகரில் இன்று தொடங்குகின்றன.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

அனைத்து தரப்பினரின் நலன்களுக்காக மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் குடியரசுத்தலைவர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து நேற்று அவர் பேசினார்.

அனைவருடைய வளர்ச்சிக்காக அனைவரும் இணைந்து செயல்படுவோம் என்பதுதான் மத்திய அரசின் குறிக்கோள் என்றும், அதற்காகத்தான் மேலும் 5 ஆண்டுகள் பணியாற்ற நாட்டு மக்கள் தமக்கு வாய்ப்பு வழங்கியுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

தேசத்திற்கே முன்னுரிமை என்பதுதான் நமது வளர்ச்சிக்கான மாதிரி என்றும், மத்திய அரசு இதர பிற்படுத்தப்பட்ட மக்கள், பெண்கள், மூன்றாம் பாலினத்தவர் உட்பட பல்வேறு தரப்பினரின் மேம்பாட்டுக்காக பணியாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தின்போது அதிகாரத்தில் தொடர வேண்டும் என்பதற்காக அவசர காலம் பிரகடனப்படுத்தப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அத்தகைய காங்கிரஸ் கட்சிதான் இன்று அரசியல் சாசனத்தின் புனிதம் பற்றி பேசி வருவதாகவும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக ஒட்டுமொத்த வடகிழக்கு மாநிலங்களும் வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருப்பதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

திரிபுரா மாநிலத்தில் அரசுப் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 800 பேருக்கு பணி ஆணைகளை காணொலி வாயிலாக வழங்கிப் பேசினார்.

திரிபுரா மாநில அரசு இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை வழங்கி வருவதாகவும், எந்தவித பாகுபாடு மற்றும் முறைகேடு இல்லாமல் வெளிப்படைத்தன்மையுடன் பணி ஆணைகள் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு மேற்கொண்ட முயற்சியின் காரணமாக பிரிவினை இயக்கங்களுடன் 3 ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதாகவும், இதனால் மாநிலத்தில் அமைதி நிலவுவதாகவும் அவர் கூறினார்.

திரிபுரா மாநிலத்தை வடகிழக்கில் உள்ள பல்வேறு மாநிலங்களுடன் சாலை மற்றும் ரயில் போக்குவரத்து வசதிகளை மத்திய அரசு மேம்படுத்தியுள்ளதாக திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் இன்று கர்நாடக மாநிலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

**Ranebennur**-ல் நடைபெற உள்ள கர்நாடக இலக்கியத் திருவிழாவில் அவர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்ற உ்ளளார்.

<<<<>>>>

ஏழை மற்றும் நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்த வாடகையிலான குடியிருப்புகள் கட்டும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக மத்திய நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. மனோகர் லால் கூறியுள்ளார்.

மக்களவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இத்திட்டம் நகர்ப்பகுதிகளுக்கு புலம்பெயரும் மக்களுக்கு பெரிதும் பயன்படும் என்று கூறினார்.

அம்மக்களின் பணியிடங்களுக்கு அருகாமையிலேயே இத்தகைய குடியிருப்புகள் கட்டித்தரப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு காலியாக உள்ள வீடுகளும், ராஜீவ் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகளும் இத்திட்டத்திற்காக பயன்படுத்திக்கொள்ளப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் ஸ்ரீபெரும்புதூரில் 18 ஆயிரத்து 112 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 6 ஆயிரத்து 160 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஓசூரில் 13 ஆயிரத்து 500 வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 6 ஆயிரத்து 576 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

கொல்கத்தாவில் நடைபெற்ற மேற்குவங்க மாநில முதலீட்டாளர்கள் மாநாட்டில் 4 லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளுக்கான யோசனைகள் வந்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த மாநாட்டின்போது மேற்குவங்க அரசுக்கும், பல்வேறு நிறுவனங்களுக்கும் இடையே ஆயிரத்து 200க்கும் மேற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக கூறினார்.

வடக்கு-24 பர்கானா மாவட்டத்தில் இயற்கை எரிவாயு துரப்பன பணிக்காக எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்திற்கு மாநில அரசு 50 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பணி நேற்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் புதுதில்லியில் நேற்று கிரீஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **George Gerapetritis**-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாக பேச்சுகள் நடத்தினார்.

இந்தப் பேச்சுகள் ஆக்கப்பூர்வமானதாக அமைந்திருந்தது என்று தமது சமூக வலைதளத்தில் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

கப்பல் போக்குவரத்து, வர்த்தகம், முதலீடு, வாகன உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு, கலாச்சார உறவுகள் தொடர்பாக கிரீஸ் அமைச்சருடன் விவாதித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்பட உள்ள நிலையில் அதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் 70 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் 60 புள்ளி நான்கு இரண்டு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

அதிகபட்சமாக வடகிழக்கு தில்லி தொகுதியில் 66 புள்ளி இரண்டு ஐந்து சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் இன்று பங்கேற்கிறார்.

திரிவேணி சங்கமத்தில் அவர் புனித நீராட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பிரயாக்ராஜில் உள்ள ஹனுமன் ஆலயம் உட்பட பல்வேறு ஆலயங்களுக்கு அவர் செல்ல உள்ளார்.

இந்நிலையில் மகா கும்பமேளாவில் பங்கேற்பதற்காக பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் இருந்து 68 யாத்ரீகர்கள் பிரயாக்ராஜ் வந்துள்ளனர்.

அவர்கள் இன்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வழிபாடு நடத்த உள்ளதாக உத்தரப்பிரதேச மாநில செய்திமக்கள் தொடர்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த கும்பமேளாவில் பங்கேற்பதற்காக இந்திய அரசு விரைவாக விசா வழங்கியதற்கு அவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

இதற்கிடையே நாட்டில் உள்ள 3 புதிய குற்றவியல் சட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் பிரயாக்ராஜில் நடைபெறும் மகா கும்பமேளாவில் டிஜிட்டல் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய நீதித்துறையின் வரலாற்றில் மாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கடந்த ஆண்டு ஜூலை ஒன்றாம் தேதி முதல் புதிய சட்டங்கள் நாடு முழுவதும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

<<<<>>>>

மத்திய பட்ஜெட்டில் லித்தியம் பேட்டரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள வரிச் சலுகைக்கு பொதுமக்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையிலான மின்சார வாகனங்களை நடுத்தர மக்களும் வாங்கும் வகையில் அளிக்கப்பட்டுள்ள இந்த சலுகை தங்களுக்கு உதவிகரமாக உள்ளதாக வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

<<<<>>>>

அருணாச்சலப்பிரதேசம், அசாமின் வடகிழக்குப் பகுதிகளில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அருணாச்சலப்பிரதேசத்தில் இன்று பலத்த மழை பெய்யக்கூடும் என்றும், இமயமலையின் மேற்குப் பகுதியிலும் மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஆசிய குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் சீனாவின் அர்பின் நகரில் இன்று தொடங்குகின்றன.

இம்மாதம் 14ஆம் தேதி வரை 8 நாட்கள் நடைபெறும் இந்தப் போட்டியில் 59 தடகள வீரர்கள் உட்பட 88 பேர் கொண்ட இந்திய அணி பங்கேற்கிறது.

முதல் முறையாக இந்தப் போட்டிக்கு தேசிய விளையாட்டு கூட்டமைப்பு திட்டத்தின்கீழ் அரசே நிதியுதவி வழங்கியுள்ளது.

<<<<>>>>

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சாகேத் மைனேனி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் **Egor Afgafonov – Evegeni** இணையை வென்றது.

<<<<>>>>

இங்கிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நாக்பூரில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த இங்கிலாந்து 47 புள்ளி 4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 248 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

249 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா 38 புள்ளி 4 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 251 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

**<<<<The End>>>>**